## விநாயகர் துதி

நித்தமும் போற்றியே நெஞ்சினில் ஏற்றியே
அத்தி முகத்தோனே அம்பிகை – சக்தியின்
புத்திரனே நின்தாளை பூசித்தே தான்கவசம்
சாத்தவேநின் றேன்நீயே சார்பு.

## சக்தி துதி

அகிலத்தின் நாயகியே அன்னையே என்றும்
தகித்திடும் சோதியே தாயே – முகிழ்ந்திட்ட
எண்ணம் தனில்கவசம் ஏற்ற வருகின்றேன்
தண்ணருள் தான்நிறையாய் தா.

## கவசம்

அன்புவலை யில்சிக்கி அன்பர் உறவுநாடி
நின்னருள் எங்கும் நிரப்பியும் – நின்றாடும்
தாயே சிரத்தை தவறாது காத்திடுவாய்
நீயேஎன் றும்நுதலை நின்றன்செங் கையிலுள்ள – 1

சூலம்கொண் டேகாக்க சுற்றிநோக்கும் கண்ணிரண்டும்
மூலப்பொ ருள்நீயே முன்னின்று – சால
கவனத் துடனே காக்களப் போதும்
உவந்தே நீயும் உதட்டையும் – நாவும் – 2

சிறப்புடன் காக்க சிவசக்தி நீதான்
மறவாது நாசிகாக்க மங்கா – உறவாய்
செவியிரண்டும் அன்புடன் சீராக காக்க
நவிலறிய முக்தியே நாளும் – பவித்திரமாய் – 3

கன்னமிரண்டும் அழகாய் காக்க அரும்பலர்
அன்னபல்ல னைத்தும் அருள் அழகே – நின்கருணை
காக்க பிடரிதான் கற்பனைக் கெட்டாதவளே
நீக்கமற நின்று காக்க நீங்காது – எக்காலும் – 4

நெஞ்சமுறை ஜோதியே நீதான் கழுத்தினை
எஞ்ஞான்றும் காக்க இருதோளும் – மெய்ஞ்ஞான
வீடளிக்கும் தாயே உவந்து நீயும் காக்க
திடமுடன் மார்பும் திகழ – சுடர்கொடியே – 5

உன்னருள் தந்தே உலகம்காப் போய்காக்க
முன்னின்றே நீயும் முனியாது – முன்கையும்
பின்கை இரண்டும் பிறைமுடிகொண் டோய்காக்க
நன்றாக வேவயிறும் நன்முதுகும் – பொன்னொளி – 6

பாவாய் பொழுதும் பரிவுடனே நீகாக்க
காவாய் எழில் உள்ளங் கையிரண்டும் – பூவாய்
நகம்சரு மம்வன் நலிவுறுந்தொ டைகள்
சகலமும் ஆட்டிடும் சாரதியே வேகமாய் – 7

வந்தே நீயும் வனப்புற காத்திடு
முந்தவே வந்து முகில் குழலோய் – எந்தன்
குறியும் இடையும் குதமுமே காக்க
அறிவிற்கெட் டாதவளே அன்பாய் – குறிப்பாய் – 8

முழங்கால் இரண்டும் மூட்டுடன் காக்க
அழகுடன் நாளும் அமைந்த – இழைவிரல்
பத்தும்பாங் காய்பரிவுடன் பக்கமிருந் தேகாக்க
தத்துவம் தேர்ந்தோய் தலைவி நீ – மூத்தவள் நீ – 9

பாதம் இரண்டும் பழகு கணுக்காலும்
தீதறவே நின்று திறம்பட பூதமைந்தும்
ஆனவளே காத்திடுவாய் ஆதார என்பும்
அனைத்தும் இணைநரம்பும் அற்புத – மோனத்தாய் – 10
காக்க உதிரம் கடமைமா றாஇதயம்
எக்கால மும்இலங்கும் எம்தாயே – காக்க
எல்லாம் உணர்ந்தவளே எங்கும் உறைபவளே
நல்லோர் புகழ்ந்திடும் நாயகியே – சொல்லால் – 11

இயம்பொணா இன் பப்பெருக்கே ஈசனின் தேவியே
காயம்தாக் கும்நோயில் காக்க – கயமை
மதியோர் தரும்மா மனக்கவலை மாற்றியே
ஆதிபொரு ளேகோள் அனைத்தையும் – நீதியாய் – 12

காப்பவளே காக்க கனவிலும் சிந்தையிலும்
தப்பாமல் வீற்றிருக்கும் தாரகமே – செப்பறிய
தேவிகாக்க மாறாது தேகம்வாட் டும்இப்
புவிளங்கும் தோன்றும் புதுநோய்கள் – மேவும் – 13

கொடுசுரம் காசமும் குன்மம் சிலந்தி
கடுவிடத்தால் தோன்றும் கடுப்பும் – நெடுநாள்
வதையாம் சருமம் வனப்பழிதல் என்பு
சிதைக்கும் உருக்கு நோயும் சீரின்றி – யாதையும் – 14

ஓர்ந்திட ஒண் ணாபித்தம் ஓய்ந்திடசெய் பேதிபோக்கும்
பார்வை தளரல் பலவுமே – நேர்ந்திடாது
நாதத்தின் அந்தமே நான்மறை போற்றும்
முதலேநா ளும்காக்க மூலமும் – சீதளமும் – 15

வாய்வுப் பிடிப்பும் வயிற்றிலும் நெஞ்சிலும்
வாய்தனிலும் தோன்றும் வலியுடை – நோய்கள்
இமையோரும் காணா இடத்திருப்போள் காக்க
நமைச்சல் சொரிசிரங்கு நீங்க – இமைப்பிலுயிர் – 16

போக்கும் இதயவலி புற்றுமிக வாதைதரு
கக்குவான் சன்னிசூலை காதின்நோய் – போக்கி
விடம்உண்டோன் நாயகியே விக்கலும்நே ராமல்
உடன்காக்க என்றும் உமையே – உடல்கிடத்தும் – 17
வாதம்வா ராதும் வலியால் நலிவுறும்
மீதநோய்கள் நேராதும் மீன்விழியால் – வேதனை
போக்கியே காக்க பொறுக்கஒண் ணாபிளவு
தாக்காது நீயும் தவிர்த்திட்டு – தக்கமனம் – 18

புக்குவாய் காக்க புலர்பொழுது பொன்னொளி
ஒக்கும் சுடரே உறுதியாய் – காக்க
ஒளிசிந் தும்பகலில் ஓங்கார மாய்நீ
களிப்புடன் காக்க கவின்மாலை – கோளினை – 19

ஆக்கினோய் காக்க அமைதிஇரா தன்னிலே
நோக்கரிய நுண்ணியளே நும்அருளால் – காக்க
வேண்டியே ஏவிடும் வேதனை ஏவலும்
தோண்டியே வைத்திடும் தொல்லைதரும் – மண்டையோடு – 20

மந்திரமும் பில்லி மனமருட்டும் சூனியமும்
தந்திரமாய் நம்மை தளர்த்திடும் – எந்திர
வட்டமும்தான் பரிதி வந்திட ஆவியாய்
கட்டோ டழிபனிபோல் காத்தெனை – விட்டோட – 21

மந்திரப் பாவையாய் வாலைச் சுடராய்
வந்தே திருவருளால் வாக்களித்து – எந்நாளும்
காப்பவளே காக்க கரியபேய்பற் றும்ஆவி
எப்போதும் எந்தனை எய்தாமல் – கூப்பி – 22

தொழுவோர் வினைதான் துகள்செய்வாய் காக்க
கழுகிலிதோற் றும்பூதம் காவும்எப் – பாழும்
பிசாசுமே என்னையேப் பின் தொடராமல் மறைசொல்
மாசற்ற மாமணியே மங்கலமே – நாசமதை – 23

செய்தேநீ காக்க செழுஞ்சுடர் தோன்றும்கிழக்கில்
ஐவகை பூதமாய் ஆனவள் – ஆய்ந்தறி
யொண்ணாய்தீ தின்றிகாக்க ஓயும் கதிர்மேலை
நண்ணும் திசையில் நிலையாய் விண்ணரசி – 24
எந்தனை காக்க எமன்உறை தென்னிலே
எந்நாளும் எந்தன் இதயத்தாய் – முந்திவந்தே
காக்க எழிலாம் கயிலைதன் நல்வடக்கில்
முக்காலம் போற்றும் முதல்வியே – காக்கசீர் – 25

அக்னிதிசை தன்னில் அமரர்த லைவிகாக்க
பக்குவமாய் வாயுவில் பார்வதி – காக்க
நிருதி திசைதன்னில் நிர்மலமே காக்க
கருதியே வேண்டுவோர் கண்கள் – உருக – 26

எளிவரும் ஆரணங்கே ஈசான்யம் காக்க
வளியாலே நீராலே வாட்டும் – குளிராலே
வெம்மை நெருப்பாலே வாராது துன் பந்தான்
எம்மையே காக்க எதிரிகள் – நம்பியே – 27

பின் கெடுக்கும் வஞ்சகரும் பேடியென சூழ்ந்தே
தன்மையின் றெம்மையே தாக்கினும் – கன்மவினை
நீக்கும்எம் தாயே நெருங்கிநின் றேகாக்க
போக்கவே இன்னுயிரை பொல்லாது – தாக்கிடும் – 28

ஆயுதங்கள் வாள்ஈட்டி அச்சம்தரு எப்பொருளும்
பாயுமுன் துணையிருந்தே பாவியேனை – நீயும்
தப்பாது காக்க தயையின்றி கொன்றிடும்
செப்பறிய வன்மைகொள் சிங்கமும் – எப்போதும் – 29

பாய்ந்துதாக் கும்புலிமுள் பன்றிசிறுத் தைகரடி
மெய்யினை தாக்காமல் வெம்மனம்–காய்ப்போள்
தடையற காக்கநீர் தன்னில் வதியும்
அடங்கா முதலையும் அச்சம் – படச்செய் – 30

சுறாவும்  திமிங்கிலங்கள் சுற்றும்நீர் யானையும்
மாறா வலியுடை மாயானை – பாறைபோல்
காண்டா மிருகம் கடிதே விரட்டி
எண்ணிறந்த எல்லை இருப்பிடமாய் –கொண்டவளே – 31

காக்கதேள் பூரான் கருநாகம் நண்டுஎலி
கக்கும் விஷங்கள் கடிதாக – தாக்காமல்
ஏகிடவிண் ணும்மண்ணும் எங்கும் நிறைந்து
தகிப்பவளே காக்க தளரா – மகிழ்வும் – 32

நிறையான செல்வமும் நிம்மதி குன்றா
பொறைமக்கள் ஏற்றமிகு போதம் – குறையா
வலிவும் குணமாய் மனையும் அளித்தே
பொலிவுடை பொன்னொளி பூவாய் – சலியாமல் – 33

நாளுமெனை காக்க நடுஆற்றில் ஓட்டை
கொளுமொரு நாவாய் குணமுடையோர் – ஆளும்சொல்
ஏலாது உய்ந்திட என்றும்ஓம் சக்தியை
மூலத்தை எண்ணவே முந்து. – 34

காக்கவேண்டும் நாளும் கவசம் பகர்வோர்தம்
பக்கமிருந் தேமேவும் பல்வினை – நீக்கியே
ஓம்சக்தி அம்மாவே ஓங்கார ரூபிணியே
உம்அருளால் நாளும் உவந்து. – 35